# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## விலங்கின நலம்பேணல்

**விலங்குகளைக் கொடுமைப்படுத்துவதிலிருந்து பாதுகாப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ; சமுதாயத்திலுள்ள விலங்குகள்பால் அன்பையும் இரக்கத்தையும், பொறுப்புள்ள நடத்தையையும் வளர்ப்பதற்கும் ; தேசிய விலங்கின நலம்பேணல் அதிகாரசபையொன்றைத் தாபிப்பதற்கும் ; பொதுவாக விலங்கின நலம்பேணலுக்கு ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

*கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வண. அதுரலிய ரதன தேரர் அவர்களால் 2010, ஒற்றோபர் மாதம் 19 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

---

*(2010, ஒற்றோபர் மாதம் 04 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது*

---

[ *43 ஆம் சட்டமூலம்* ]

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 36.00** **தபாற் செலவு : ரூபா 12.50**

2-PL 003675 - 350 (2009/02)

***விலங்குகளைக் கொடுமைப்படுத்துவதிலிருந்து பாதுகாப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ; சமுதாயத்திலுள்ள விலங்குகள்பால் அன்பையும் இரக்கத்தையும், பொறுப்புள்ள நடத்தையையும் வளர்ப்பதற்கும் ; தேசிய விலங்கின நலம்பேணல் அதிகாரசபையொன்றைத் தாபிப்பதற்கும் ; பொதுவாக விலங்கின நலம்பேணலுக்கு ஏற்பாடுசெய்வதற்கும் ; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கு மானதொரு சட்டம்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

***1**. இச்சட்டம் 2010 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, விலங்கின நலம்பேணல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும் :*

*ஆயின், இச்சட்டத்தின் வெவ்வேறு பாகங்கள் தொடர்பில் அமைச்சர் வெவ்வேறு தேதிகளை நியமிக்கலாம்.*

## *பாகம்* I

### குறிக்கோள்கள்

*குறிக்கோள்கள்.*

***2**. இச்சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாகும் :-*

*(1) விலங்குகளை மனிதாபிமானத்துடன் நடாத்துவதற்கும் அந்த விலங்குகளின் நலனை உறுதிப்படுத்துவதற்கு நியாயமான எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதற்கும் விலங்கினங்களுக்குப் பொறுப்பாகவுள்ள ஆட்களுக்குள்ள ஒரு பராமரிப்புக் கடமையை ஏற்றங்கீகரித்தல் ;*

(2) விலங்குகள் கொடுமைப்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கும் விலங்குகளின் பாதுகாப்பையும் நலம் பேணலையும் உறுதிசெய்தலும் விலங்குகள் தொடர்பாகக் குறித்த சில வகுதிகளைச் சேர்ந்த நடத்தைகளைத் தடைசெய்தலும், சட்டத்தின் மீறுகைக்குத் தண்டங் களை விதித்தலும் ;

(3) தேசிய விலங்கின நலம்பேணல் அதிகாரசபையொன்றைத் தாபித்தலும் விலங்கின நலம் பேணலுக்கான ஒழுங்குவிதிகளுக்கும் செயல்முறைக் கோவைகளுக்கும் ஏற்பாடுசெய்தலும் ; அத்துடன்

(4) விலங்கின நலம்பேணல் பற்றிச் சமுதாய விழிப்புணர்வை எழுப்புதல்.

## பாகம் II

## தேசிய விலங்கின நலம்பேணல் அதிகாரசபை

*விலங்கின நலம்பேணல் அதிகாரசபை.*

**3.** (1) தேசிய விலங்கின நலம்பேணல் அதிகாரசபை என அழைக்கப்படவேண்டிய அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும் ; (அது, இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "அதிகார சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்).

(2) அதிகாரசபையானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரைக்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் உடையதாதலும் வேண்டும் ; அத்துடன் அப்பெயரில் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

*4*. அதிகாரசபையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :- அதிகார சபையின் அமைப்பு.

(அ) (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அமைச்சரினால் பின்வருமாறு நியமிக்கப்பட்ட பத்துப்பேர் :-

(i) விலங்கின நலம்பேணல் சங்கங்களினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆட்களிடையேயிருந்து விலங்கின நலம்பேணலில் பரந்த அனுபவமுள்ள ஆறுபேர் ; இவர்களுள் ஆகக் குறைந்தது ஒருவராவது சட்டத்தரணியொருவராக இருத்தல் வேண்டும் ;

(ii) இலங்கை விலங்கின மருத்துவப் பேரவையால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட விலங்கின மருத்துவ விஞ்ஞானத்தில் தகைமைகள் கொண்டவர்களான இரண்டு பேர் ;

(iii) விலங்குகளுக்குச் சிகிச்சையளிப்பதில் அனுபவமுடையவரும் ஆயுர்வேத மருத்துவப் பேரவையால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரும், ஆயுர்வேத வைத்தியரொருவராகவுள்ளவருமான ஆள் ஒருவர் ;

(iv) இலங்கையிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் மருத்துவ விலங்கின மருத்துவ விஞ்ஞானத்தில் ஒரு பேராசிரியராக அல்லது சிரேஷ்ட விரிவுரையாளராக உள்ள ஆள் ஒருவர் ; இவர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் ; அதாவது :-

(i) வனசீவராசிகள் பாதுகாப்புத்துறைப் பணிப்பாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(ii) தேசிய மிருகக் காட்சிச்சாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(iii) மத்திய சூழல் அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது நியமத்தர் ;

(iv) 1991 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, விலங்கின நோய்கள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது நியமத்தர் ;

(v) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி அல்லது பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவியிலுள்ள வரான அவரது நியமத்தர் ; அத்துடன்

(vi) சுகாதார அமைச்சில் பொதுச் சுகாதார சேவை களுக்குப் பொறுப்பாகவுள்ள பணிப்பாளர்.

உறுப்பின ரொருவராக இருப்பதற் கெதிரான தகைமையீனம்.

**5.** ஆளொருவர்,-

(அ) அவர் பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் உறுப்பினரொருவராக, இருப்பின் அல்லது வரின் ; அல்லது

(ஆ) அவர் இலங்கைப் பிரசையொருவராக இல்லாதிருப் பின் அல்லது இல்லாதொழியின் ; அல்லது

(இ) அவர் இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீன மற்றவராகக் காணப்படின் அல்லது வெளிப்படுத்தப் படின் ; அல்லது

(ஈ) அவர் வங்கிமுறிந்தவராக அல்லது கடனிறுக்க வகை யற்றவராக வெளிப்படுத்தப்பட்டு பொறுப்பு விடுவிக் கப்படாத வங்கிமுறிந்த அல்லது கடனிறுக்க வகை யற்ற ஒருவராக இருப்பின் ; அல்லது

(உ) அவர் இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பை அனுபவித்துக்கொண் டிருப்பின் அல்லது முற்போந்த ஏழு ஆண்டுகளின் போது எந்நேரத்திலும் அனுபவித்திருப்பின் அல்லது இலங்கையிலாயினுஞ்சரி அல்லது வேறேதேனும் நாட்டிலாயினுஞ்சரி, விலங்கினப் பாதுகாப்பு அல்லது நலம்பேணல் தொடர்பான ஏதேனும் சட்டத்தின் கீழான ஏதேனும் தவறுக்காகச் சட்ட நீதிமன்றமொன்றினால் எந்நேரத்திலும் குற்றவாளி யாகக் காணப்பட்டிருப்பின் ; அல்லது

(ஊ) அவர் அதிகாரசபையால் அல்லது அதன்சார்பில் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நன்மையைக் கொண்டிருப்பின் அல்லது துய்ப்பின் ; அல்லது

(எ) அவர் அதிகாரசபையின் உறுப்பினரொருவராக அவரது பணிகளை ஆற்றுவதனைப் பங்கமான முறை யில் பாதிக்கும் சாத்தியமுள்ள ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருப்பின்

அதிகாரசபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

உறுப்பினர்கள் பதவி விலகுதலும் அவாக்ள் அகற்றப் படுதலும்.

**6**. (1) நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் அவரது பதவி யிலிருந்து விலகலாம் என்பதுடன், அத்தகைய பதவிவிலக லானது அது அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியி லிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(2) அமைச்சர் குறித்துக்காட்டப்படும் காரணங்களுக்காக அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் இறக்குமிடத்து, பதவி விலகுமிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து, அமைச்சர், 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவரது இடத்திற்கு வேறோர் உறுப்பினரை நியமித்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

*உறுப்பினர்களின் பதவிக்காலம்.*

**7**. முதலில் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுள் இருவர் அவரவரது நியமனக் கடிதங்களில் குறித்துரைக்கப்பட்டவாறு, இரண்டு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும். இருவர் மூன்று ஆண்டுகளைக்கொண்ட ஒரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும் ; மூவர் நான்கு ஆண்டுகளைக்கொண்டவொரு காலப்பகுதிக்கு பதவிவகிக்க வேண்டும், மற்றும் மூவர் ஐந்து ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு பதவிவகித்தல் வேண்டும் ; அத்தகைய உறுப்பினர்களை அடுத்துறுவதற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் ஐந்தாண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

*உறுப்பினர்களின் ஊதியம்.*

**8**. அதிகாரசபையின் உறுப்பினர்களுக்கு அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களிலான அத்தகைய ஊதியம் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*அதிகார சபையின் தவிசாளரும் பிரதித் தவிசாளரும்.*

**9**. (1) அமைச்சர், நியமிக்கப்பட்ட உறுப்பினர்களிடையேயிருந்து அதிகாரசபையின் தவிசாளரொருவரையும் பிரதித் தவிசாளரொருவரையும் நியமித்தல் வேண்டும்.

(2) தவிசாளர் அல்லது பிரதித் தவிசாளர் சுகயீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாதிருப்பதன் காரணமாக அவரது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக புரிவதற்கு இயலாதவராகவிருப்பின் அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென அமைச்சர் அதிகாரசபையின் வேறோர் உறுப்பினரை நியமிக்கலாம்.

*அதிகார சபையின் கூட்டங்கள்.*

**10.** (1) அதிகாரசபையின் தவிசாளர் அதிகாரசபையின் கூட்டம் ஒவ்வொன்றிற்கும் தலைமைதாங்குதல் வேண்டும். அத்தகைய கூட்டம் எதிலும் தவிசாளர் சமுகமாயிராதபோது, பிரதித் தவிசாளர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர், பிரதித் தவிசாளர் ஆகிய இருவரும் சமுகமாயிராதபோது சமுகமாயிருக்கும் உறுப்பினர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஒருவர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஏழு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் ஏதேனும் கூட்டத்திற்குத் தலைமைதாங்கும் தவிசாளர் அல்லது பிரதித் தவிசாளர் அல்லது வேறு உறுப்பினர், அவரது சொந்த வாக்குக்குடன் சேர்த்து மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, அதிகாரசபையானது, அதிகாரசபையின் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் தொடர்பிலுமான நடவடிக்கைமுறையினை ஒழுங்குபடுத்தலாம்.

*செயல்கள் வெற்றிடம் அல்லது நியமனத்திலான குறைபாடு இருப்பதன் காரணமாகச் செல்லுபடியற்றனவாகாமை.*

**11.** அதிகாரசபையின் செயல், முடிவு அல்லது நடவடிக்கை எதுவும், அதிகாரசபையின் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினர் எவரினதும் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதலாகாது.

*அதிகார சபையின் இலச்சினை.*

**12.** (1) அதிகாரசபையின் இலச்சினை அதிகாரசபையால் தீர்மானிக்கவும் வடிவமைக்கவும்படலாம் என்பதுடன் அதிகாரசபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றவும்படலாம்.

(2) அதிகாரசபையின் இலச்சினை அதிகாரசபையால் காலத்துக்குக்காலம் முடிபுசெய்யப்படக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் இலச்சினை அதிகாரசபையின் அனுமதியுடன் தவிரவும் தவிசாளரினதும் வேறோர் உறுப்பினரினதும் முன்னிலையிலன்றியும் ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது ; இவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அத்தகைய சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) அதிகாரசபையின் இலச்சினை எந்தச் சாதனங்களுக்கும் ஆவணங்களுக்கும் பொறிக்கப்படுகின்றதோ அந்த சாதனங்களும் ஆவணங்களும் பற்றிய இடாப்பொன்றை அதிகாரசபை பேணுதல் வேண்டும்.

*அதிகாரசபையின் தத்துவங்களையும் பணிகளையும் கையளித்தல்.*

**13.** அதிகாரசபையானது, அதன் தத்துவங்களுள் மற்றும் பணிகளுள் எவற்றையும் அதிகாரசபையின் தவிசாளருக்கு, பிரதித்தவிசாளருக்கு, பணிப்பாளருக்கு, ஏதேனும் குழுவுக்கு, அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்கு அல்லது வேறு எவரேனும் உறுப்பினருக்குக் கையளிக்கலாம் ; ஏதேனும் தத்துவம் அல்லது பணி அவ்வாறு கையளிக்கப்பெற்றுள்ளவிடத்து அத்தகைய எவரேனுமாள் அதிகாரசபையின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கமைய, அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய தத்துவத்தைப் பிரயோகித்தலும் அத்தகைய பணியை ஆற்றுதலும் வேண்டும்.

## பாகம் III

### பணிகளும் தத்துவங்களும்

*அதிகாரசபையின் பணிகள்.*

**14.** அதிகாரசபையின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:

(அ) விலங்கின நலம்பேணல் பற்றிய தேசியக் கொள்கையொன்றை வகுத்தமைப்பதில் அரசாங்கத்திற்கு மதியுரையளித்தல் ;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தல் ;

(இ) விலங்கினப் பாதுகாப்பிற்கும் விலங்கினங்கள் கொடுமைப்படுத்தப்படுவதைத் தடுப்பதற்குமான வழிமுறைகள்பற்றி அரசாங்கத்திற்கு மதியுரையளித்தல் ;

(ஈ) விலங்கின நலம்பேணல் தொடர்பான சட்டங்களைப் பரிசீலனையின்கீழ் எப்பொழுதும் வைத்திருத்தலும் அத்தகைய எவையேனும் சட்டங்களுக்குப் பொறுப்பேற் கப்படவேண்டிய திருத்தங்கள் பற்றி அரசாங்கத்திற்கு மதியுரையளித்தலும் ;

(உ) இயைபான முகவர் நிலையங்களுடனும் குழுக்களுடனும் விலங்கின நலம்பேணல் ஒழுங்கமைப்புகளுடனுமான கலந்தாலோசனையுடன் சர்வதேசரீதியில் ஏற்றுக்கொள் ளப்பட்ட நியமங்களுக்கும் மிகச் சிறந்த செயல்முறை களுக்கும் ஒத்திருக்கின்ற விலங்கின நலம்பேணல் தொடர்பான செயல்முறைக்கோவைகளை வகுத்தமைத் தல் ;

(ஊ) அரசாங்க முகவர் நிலையங்களுக்கும், மாகாண அதிகார சபைகளுக் கும் உள்ளூரதிகார சபைகளுக்கும், விலங்கின நலம்பேணல் சங்கங்களுக்கும், மதக்குழுக்களுக்கும், பாடசாலைகளுக்கும் மற்றும் வேறு கல்வி நிறுவனங் களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே இச்சட்டத்தின் குறிக்கோள்களும் ஏற்பாடுகளும் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல் ;

(எ) விலங்குகள்பால் அன்பையும் இரக்கத்தையும் பொறுப் புள்ள நடத்தையையும் வளர்த்தல் ;

(ஊ) இச்சட்டத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துகையில் விலங்கின நலம்பேணல் சங்கங்களுடன் ஒத்துழைத்தல் ;

(ஐ) இச்சட்டத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்காக விலங்கின நலம்பேணல் சங்கங்களை அமைப்பதனையும் அபிவிருத்தி செய்வதனையும் ஊக்குவித்தலும் அத்தகைய சங்கங்களுக்கு நிதிசார் மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதலும் ;

(ஒ) விலங்கின உறைவிடங்களிலும் வேறிடங்களிலும் வழங்கப்படக்கூடிய விலங்கின மருத்துவப் பராமரிப்புத் தொடர்பாகத் தோதான நியமங்கள் பற்றியும் வழிமுறைகள் பற்றியும் அரசாங்கத்திற்கு மதியுரையளித்தல் ;

(ஓ) விலங்கின நலம்பேணல் பற்றிய தேசியக் கொள்கையைப் பயனுள்ள வகையில் செயற்படுத்துவதற்குத் தேவையான சட்ட, நிருவாக அல்லது வேறு சீர்திருத்தங்களை விதந்துரைத்தல் ;

(ஔ) விலங்கின நலம்பேணல் தொடர்பாகப் பொதுமக்களிடமிருந்து முறையீடுகளைப் பெற்று, அவசியமானவிடத்து அத்தகைய முறையீடுகளைத் தோதான அதிகாரிகளுக்கு ஆற்றுப்படுத்துதல் ;

(க) விலங்குகளுக்கெதிரான தவறுகள் தொடர்பான புலனாய்வுகளினதும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளினதும் முன்னேற்றத்தைக் கண்காணித்தல் ;

(ங) விலங்கினக்காப்பையும், பாதுகாப்பையும், நலம் பேணலையும் உறுதிப்படுத்துவதற்குத் தோதான நடவடிக்கைகளை எடுத்தல் ;

(ச) விலங்குகளைக் கொடுமைப்படுத்துவதற்கெதிரான இயக்கங்களை ஒருங்கிணைப்பதற்கு அரசாங்க முகவர் நிலையங்களுக்கும், மாகாண அதிகாரசபைகளுக்கும், உள்ளூர் அதிகாரசபைகளுக்கும் அரசாங்க சார்பற்ற ஒழுங்கமைப்புகளுக்கும், விலங்கின நலம்பேணல் சங்கங்களுக்கும், மத நிறுவனங்களுக்கும், பொது மக்களுக்கும் மதியுரையளித்தலும் துணைபுரிதலும், விலங்கின நலம்பேணலுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் கருமத்தின்மீது மதியுரையளித்தலும் ;

(ஞ) விலங்கின நலம்பேணல் தொடர்பான கருமங்களின்மீது தேசிய தரவுத்தளம் ஒன்றைத் தயாரித்தலும் பேணுதலும் ;

(ட) விலங்கின பராமரிப்புச் சேவைகளையும் விலங்குகளுக் கான காப்பு இல்லங்களையும் விலங்கின உறை விடங்களையும் வழங்கும் நிறுவனங்களை மேற்பார்வை செய்தலும் கண்காணித்தலும் ;

(ண) விலங்குகளை மனிதாபிமானத்துடன் நடாத்துவது மற்றும் விலங்கின நலம்பேணலை மேம்படுத்துவது என்பன தொடர்பான கல்வியை மேம்படுத்தல் ;

(த) விலங்கின நலம்பேணல் மற்றும் விலங்குகளுக் கெதிரான எல்லாவகையினவையுமான கொடுமை களையும் தடுத்தல் என்பன தொடர்பில் வெளிநாட்டு அரசாங்கங்களுடனும் சர்வதேச ஒழுங்கமைப்பு களுடனும் வேறு நாடுகளிலுள்ள விலங்கின நலம் பேணல் கழகங்களுடனும் இணைந்து செயலாற்றுதலும் தகவல் பரிமாற்றுதலும் ;

(ந) விலங்கின நலம்பேணல் கழகங்கள் பற்றிய அல்லது சங்கங்கள் பற்றிய அத்துடன் விலங்கின உறைவிடங் கள் பற்றிய இடாப்பொன்றை வைத்திருத்தலும் பேணுதலும் ; அத்துடன்

(ப) இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக விசேட நிதியங்களைத் தாபித்தல்.

**15.** அதிகாரசபையானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :- அதிகார சபையின் தத்துவங்கள்.

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத் தைக் கொள்ளுதல், வைத்திருத்தல், வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல், விற்பனை செய்தல் அல்லது வேறுவகையில் கையுதிர்த்தல் ;

(ஆ) அதன் பணிகளை ஆற்றும் நோக்கத்திற்காக அமைச் சரால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகள் மீது பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப்பொறுப்பின்றியோ பணங்களைக் கடனெடுத்தல் ;

(இ) பணமாகவாயினுஞ்சரி வேறுவகையாகவாயினுஞ்சரி கொடைகளை, மானியக்கொடைகளை அல்லது நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளுதலும் அதன் பணிகளை ஆற்றுவதற்கு அவற்றைப் பிரயோகித்தலும் ;

(ஈ) அதிகாரசபையினால் அவர்களுக்குக் கையளிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காகவும் பணிகளை ஆற்றுவதற்காகவும் மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் குழுக்களைத் தாபித்தல் ;

(உ) இச்சட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய நோக்கங்களுக்காக, உரிமங்களையும், அனுமதிப்பத்திரங்களையும், சான்றிதழ்களையும் வழங்குதல் ;

(ஊ) இச்சட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கான நியமனங்களைச் செய்தல் ;

(எ) சமூக பாதுகாப்புத் திட்டமொன்றைத் தாபித்தலும் அதன் அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் நலம்பேணல் மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை ஏற்பாடு செய்தலும் ;

(ஏ) இலங்கையிலாயினுஞ்சரி, இலங்கைக்கு வெளியிலாயினுஞ்சரி அதிகாரசபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் பணிகளை ஆற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்துகொள்ளுதலும் புரிதலும் ;

(ஐ) அதிகாரசபையின் அலுவல்களை நிருவகித்தல் தொடர்பான விதிகளை ஆக்குதல் ;

(ஒ) விலங்குகளுக்குப் பராமரிப்பும் கட்டுக்காப்பும் வழங்கும் நோக்கத்துக்காக உறைவிடங்களைத் தாபித்தல் ;

(ஓ) இச்சட்டத்தின்கீழான தவறுகளுக்காக, தோதான விடத்து குற்றவழக்குகளைத் தொடுத்தல் ; அத்துடன்

(ஔ) அதிகாரசபையின் பணிகளைத் தகுந்தமுறையில் ஆற்றுவதனை வசதிப்படுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வேறு காரியங்கள் அனைத்தையும் செய்தல்.

## பாகம் IV

### அதிகாரசபையின் பணியாட்டொகுதி

**16**. (1) பணிப்பாளரொருவரும், பிரதிப் பணிப்பாளரொருவரும், உதவிப் பணிப்பாளர்களும், விலங்கின நலம்பேணல் பரிசோதகர்களும், அதிகாரசபையின் பணிகளை வினைத் திறனுடன் ஆற்றுவதற்கு அவசியமானவர்களெனக் கருதப் படக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களும் ஊழியர் களும் அதிகாரசபைக்கு நியமிக்கப்படுதல் வேண்டும்.

*அதிகார சபையின் பணியாட் டொகுதி.*

(2) பணிப்பாளர், பிரதிப்பணிப்பாளர் மற்றும் உதவிப் பணிப்பாளர்கள் என்போரை நியமிப்பதற்கும், இடமாற்று வதற்கும், பதவிநீக்குவதற்கும், அவர்களின்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்குமான தத்துவம், அதிகார சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்டவர்கள் அல்லாத வேறு அலுவலர்களையும் ஊழியர்களையும், நியமிப் பதற்கும், இடமாற்றுவதற்கும், பதவிநீக்குவதற்கும், அவர் களின்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்குமான தத்துவம் பணிப்பாளருக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கு, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சின்

அங்கீகாரத்துடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கக்கூடிய வாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களின்படியும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அங்கீகாரத் துடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அவர்கள் அமைந் தோராதலும் வேண்டும்.

(5) அதிகாரசபையின் வேண்டுகோளின் பேரில் பகிரங்க சேவை யிலுள்ள அலுவலர் ஒருவர், அந்த அலுவலரினதும் அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், அதே போன்ற சம்மதத்துடன் அதிகாரசபையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குத் தற்காலிகமாக அதிகாரசபைக்கு நியமிக்கப்படலாம், அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(6) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(7) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகார சபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடைனவாதல் வேண்டும்.

(8) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங் கத்திற்குச் சேவையாற்ற உடன்பட்டுள்ள எவரேனுமாளை அதிகாரசபை தொழிலுக்கமர்த்துமிடத்து, அதிகாரசபைக்கு அவ்வாளினால் ஆற்றப்படும் ஏதேனும் சேவைக்காலப்பகுதி, அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்கான சேவையாகக்கொள்ளப் படுதல் வேண்டும்.

**அதிகார சபையின் பணிப்பாளர்.**

**17.** அதிகாரசபையின் பணிப்பாளர் அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலராதல் வேண்டுமென்பதுடன், அவரது பணிகளை ஆற்றுகையில் அதிகாரசபையின் கொள்கைக்கும் பணிப்புகளுக்கும் இணங்கச் செயலாற்றுதலும் வேண்டும்.

## பாகம் V

## நிதி

**அதிகார சபையின் நிதியம்.**

**18.** (1) அதிகாரசபை அதன் சொந்த நிதியைக் கொண்டிருத்தல் வேண்டும். (அது இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

(2) நிதியத்திற்குப் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) திரட்டுநிதியத்திலிருந்து அதிகாரசபையின் பயன் பாட்டுக்கெனப் பாராளுமன்றத்தால் வாக்களிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகை களும் ;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையில், புரிகையில் அத்துடன் ஆற்றுகையில் அதனால் பெறப் படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகை களும் ; அத்துடன்

(இ) 19 ஆம் பிரிவின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட விசேட நிதியங்களினுட் செலுத்தப்படக்கூடியவாறான அத்த கைய பணத்தொகைகள் தவிர, எத்தகையதுமான எம்மூலத்திலிருந்தேனும் கொடைகள், மானியக்கொடை கள் அல்லது நன்கொடைகள் என்றவகையாக அதிகார சபையால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் அதிகாரசபை அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் ஆற்றுவதிலும், புரிவதிலும் அதனால் உறப்பட்ட செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும், நிதியத்திலிருந்து செலுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

விலங்கின நலம் பேணலுக்கான விசேட நிதியங்கள்.

**19**. விலங்கின நலம்பேணல் நிலையங்கள், விலங்கின உறைவிடங்கள், விலங்கின மருத்துவமனைகள் என்பவற்றைத் தாபித்தலும் மற்றும் வேறு ஒத்த வழிமுறைகளும் உட்பட, விலங்கின நலம்பேணல் வழிமுறைகளுக்கான ஆதாரத்தை வழங்கும் இலக்குடனான விசேட கருத்திட்டங்களுக்காக அல்லது நிகழ்ச்சித்திட்டங்களுக்காக, எத்தகையதுமான எம்மூலத்திலிருந்தேனும் கொடைகள், மானியக்கொடைகள் அல்லது நன்கொடைகள் என்றவகையாகப் பெறப்பட்ட பணங்களைக்கொண்டு அதிகார சபையினால் விசேட நிதியங்கள் தாபிக்கப்படலாமென்பதுடன், இச்சட்டத்தின் 20 ஆம், 21 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய விசேட நிதியங்களுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

குறித்தசில வரிகளிலிருந்து விலக்களிக்கப் படுதல்.

**20**. அதிகாரசபைக்குப் பணமாக அல்லது வேறுவகையாகச் செலுத்தப்பட்ட நன்கொடை ஒவ்வொன்றும் 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, அரசாங்கத்தால் தாபிக்கப்பட்ட நிதியமொன்றுக்குப் பணமாகவோ அல்லது வேறுவகையாகவோ செலுத்தப்பட்ட நன்கொடையொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.

**21**. (1) அதிகாரசபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களினது கணக்குகளின் கணக்காய்வு தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், அதிகாரசபையினது கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் VI

### பராமரிப்புக் கடமை

விலங்குகளைப் பராமரிப்பதற்கான கடமை.

***22***. விலங்கொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவர், அதனைப் பராமரிப்பதற்கான கடமையுடையவராவார்.

விலங்குகளுக்குப் பொறுப்பாகவுள்ள ஆட்களின் கடமை.

***23***. இருபத்திரெண்டாம் பிரிவினது ஏற்பாடுகளின் பொதுமைக்குப் பங்கமின்றி, விலங்கொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள ஆளொவ்வொருவரும் -

(அ) அத்தகைய விலங்கின் நலனை உறுதிப்படுத்துவதற்கு நியாயமான எல்லா வழிமுறைகளையும் எடுத்தலும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய விலங்குக்கு அவசியமற்ற அச்சத்தை அல்லது வேதனையை ஏற்படுத்துவதனைத் தடுத்தலும் ; அத்துடன்

(இ) (i) தோதானவையும் ; அத்துடன்

(ii) அவ்வாளினால் வழங்குவதற்கு நியாயமானளவு செயல்முறைச் சாத்தியமுள்ளவையும்,

ஆன உணவு, நீர், சுகாதாரமான வாழ்க்கை நிலைமைகள், போதிய வாழிடவசதி மற்றும் உறைவிடம் என்பவற்றை அவ்விலங்குக்கு வழங்குதலும்,

அவரது கடமையாதல் வேண்டும்.

## பாகம் VII

### விலங்குகளைக் கொடுமைப்படுத்துதல் தொடர்பான தவறுகள்

விலங்குகளைக் கொடுமைப் படுத்துதல்.

***24***. (1) (அ) விலங்கொன்றை அடிக்கின்ற, உதைக்கின்ற, அதன்மேல் ஏறிச் சவாரி செய்கின்ற, அதுகளைப்புறும்வகையில் அதனைச் ஓட்டிச்

செல்கின்ற, அதன்மீது அளவுக்கதிகமாக சுமை ஏற்றுகின்ற, அதனை அளவுக்கதிகமாக சுமை ஏற்றுகின்ற, அதனை அளவுக்கதிமாக வேலை செய்விக்கின்ற, அளவுக்கதிமாக நடத்திச்செல்கின்ற, சித்திரவதை செய்கின்ற, பயமுறுத்துகின்ற அல்லது அதனை அவசியமற்ற வேதனைக்குட்படுத்தும் வகையில் வேறுவகையாக நடாத்துகின்ற, அல்லது விலங்கொன்றுக்குப் பொறுப்பாக வுள்ள ஓர் ஆளாகவிருந்துகொண்டு அவ்விலங்கு அவ்வாறு நடாத்தப்படுவதனை அனுமதிக்கின்ற ; அல்லது

(ஆ) ஏதேனும் நோய், உடற்றகுதியீனம் அல்லது காயம் காரணமாக, அல்லது வேறு காரணத்துக்காக, அத்தகைய விலங்கு அவ்வாறு பயன்படுத்தப்படுவதற்குத் தகுதியற்றதாகவுள்ள ஏதேனும் வேலையில் அல்லது தொழிலில் அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக அதனைப் பயன்படுத்து கின்ற, அல்லது அவ்விலங்குக்குப் பொறுப் பாகவுள்ள ஆளாகவிருந்துகொண்டு அத்தகைய ஏதேனும் தகுதியற்ற விலங்கை அவ்வாறு பயன்படுத்துவதற்கு அனுமதிக் கின்ற ; அல்லது

(இ) விலங்கொன்றை அதன் இயற்கையான ஆற்றல்களை அல்லது வலிமையை விஞ்சுவதற்கு வலோத்காரப்படுத்துதல் உட்பட, அதன் உடலைத்துக்கும் நலம் பேணலுக்கும் பங்கம்விளைவிக்கின்ற வொருவகையில் பயிற்றுவிக்கின்ற ; அல்லது

(ஈ) வேண்டுமென்றும் நியாயமற்ற முறையிலும் ஏதேனும் நஞ்சை, ஊறுவிளைவிக்கும் அவுடதத்தை அல்லது பதார்த்தத்தை

விலங்கொன்றுக்கு ஏற்றுகின்ற அல்லது வேண்டுமென்றும் நியாயமற்ற முறையிலும் ஏதேனும் நஞ்சு, ஊறுவிளைவிக்கும் அவுடதம் அல்லது பதார்த்தம் விலங்கொன்றினால் உட்கொள்ளப்படுவதனைச் செய்விக்கின்ற அல்லது செய்விப்பதற்கு எத்தனிக்கின்ற ; அல்லது

(உ) விலங்கொன்றை வேதனைக்குட்படுத்தும் அத்தகையவொரு முறையில் அல்லது நிலையில் ஏற்றிச்செல்கின்ற அல்லது கொண்டுசெல்கின்ற ; அல்லது

(ஊ) ஒரு விலங்கிற்கு நடமாடுவதற்கான நியாயமான வாய்ப்பை அனுமதிப்பதற்கு உயரத்திலும் நீளத்திலும் அகலத்திலும் போதியளவிலான அளவையைக் கொண்டிராத ஏதேனும் கூண்டில் அல்லது ஏதேனும் இடத்தில் அவ்விலங்கை வைத்திருக்கின்ற அல்லது அடைத்துவைத்திருக்கின்ற ; அல்லது

(எ) விலங்கொன்றை நியாயமற்ற காலப்பகுதிக்கு நியாயமற்றளவு குறுகிய அல்லது நியாயமற்றளவு பாரமான சங்கிலியால் அல்லது கயிற்றால் சங்கிலியிடுகின்ற கட்டிவைத்திருக்கின்ற, அல்லது விலங்கொன்றை வேதனைக்குட்படுத்தும் அத்தகைய ஒருமுறையில் அதனைக் கட்டிவைக்கின்ற அல்லது பிணித்துவைக்கின்ற அல்லது நுகத்தடியில் மாட்டிவைத் திருக்கின்ற ; அல்லது

(ஏ) விலங்கொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள ஆளாகவிருந்துகொண்டு அதற்கு உணவு, நீர் அல்லது உறைவிடம் வழங்குவதற்கு வேண்டுமென்ற தவறுகின்ற ; அல்லது

(ஜ) விலங்கொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள ஆளாகவிருந்துகொண்டு, அது உணவுக்கான விலங்கொன்றாகவிருந்தாலொழியவும், அதனைக் கொல்லுதலானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகவிருந்தாலொழியவும், அல்லது அத்தகைய விலங்கு பொதுமக்களுக்கு ஒரு பாரதூரமான, உடனடி ஆபத்தாக அமைந்தாலொழியவும், அவ்விலங்கை அல்லது அதன் குட்டியைக் கொல்லுகின்ற ; அல்லது

(ஒ) விலங்கொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவராகவிருந்துகொண்டு அவ் விலங்கைக் கைவிடுகின்ற ; அல்லது

(ஓ) வேறேதேனும் வேண்டுமென்ற செயலின் மூலம் அல்லது செய்யாமையின்மூலம் விலங்கொன்றுக்கு அவசியமற்ற வேதனையை விளைவிக்கின்ற,

எவரேனுமாள் விலங்குகளைக் கொடுமைப்படுத்துதல் என்ற தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானனொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

அவசியமற்ற வகையில் கொடுமையான முறையில் விலங்கைக் கொல்லுதல் தவறொன்றாகும்.

**25.** அவசியமற்றவகையில் கொடுமையானவொரு முறையில் விலங்கொன்றைக் கொல்லுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு

காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*கருத்தரித்துள்ள விலங்கொன்றைக் கொல்லுதல் தவறொன்றாகும்.*

**26.** (1) கருத்தரித்துள்ள ஏதேனும் விலங்கை, சொல்லப்பட்ட விலங்கு பொதுமக்களுக்குப் பாரதூரமான, உடனடி ஆபத்தாக அமையுமிடத்துத் தவிர, உட்கருத்துடன் கொல்லுகின்ற அல்லது கொல்லப்படுவதற்கென அறிந்துகொண்டு விற்பனை செய்கின்ற அல்லது ஒப்படைக்கின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது மூன்றாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான தவறொன்றுக்கான குற்றவழக்குத்தொடுப்பொன்றில் எந்த விலங்கு தொடர்பாகத் தவறுபுரியப்பட்டுள்ளதெனச் சார்த்தப்படுகின்றதோ அந்த விலங்கு, தவறுபுரியப்பட்ட நேரத்தில் கருத்தரித்திருந்ததா என்பது பற்றிய கேள்வி எழுமாயின், தவறுபுரியப்பட்ட நேரத்தில் அவ்விலங்கு கருத்தரித்திருந்தது என்ற பொருள்பட விலங்கின மருத்துவரொருவரின் கைப்பட்ட சான்றிதழொன்று, கையொப்பம் பற்றிய எண்பிப்பின்றி சான்றில் ஏல்தகவுடையதாதல் வேண்டுமென்பதுடன், முரணான சான்று இருந்தாலொழிய, அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகளுக்கான எண்பிப்பாதலும் வேண்டும்.

## பாகம் VIII

### தடை செய்யப்பட்ட நடத்தை

*கைப்பற்றுதல் முதலிய வற்றுக்கான பொறிகளை இடுதல் தடை செய்யப் பட்டுள்ளது.*

**27.** (1) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, ஆளெவரும் ஏதேனும் நியாயமான காரணமின்றி விலங்கொன்றை கைப்பற்றுவதற்கு, அதற்குக் தீங்குவிளைவிப்பதற்கு அல்லது அதனைக் கொல்லுவதற்குப் பொறியொன்றை இடுதலோ அல்லது இடச்செய்வித்தலோ ஆகாது.

*பறவைகளைச் சட்டமுறையற்ற வகையில் அடைத்து வைத்தல் தடைசெய்யப் பட்டுள்ளது.*

**28.** ஆளெவரும் பறவையொன்றை –

(அ) அதன் காலுக்கு ஒரு வளையத்தை, சங்கிலியை, நூலை, கயிற்றை அல்லது கம்பியைப் பொருத்துவதன் மூலம் ; அல்லது

(ஆ) அதன் கழுத்தை அல்லது உடலைச் சுற்றிய தடுப்பான் மூலம் ; அல்லது

(இ) அதன் சிறகுகளைக் கத்தரிப்பதன்மூலம்,

அடைத்து வைத்தலாகாது.

*அழகு சாதனங்கள் முதலியவற்றைப் பரீட்சிப்பதற்காக விலங்குகளைப் பயன்படுத்துவது தடைசெய்யப் பட்டுள்ளது.*

**29.** ஆளெவரும் அழகுசாதனங்களை, அழகுசாதனச் சேர்க்கைப் பொருட்களை அல்லது அழகுசாதன உற்பத்திப் பொருட்களைப் பரீட்சிப்பதற்கு விலங்கொன்றைப் பயன் படுத்துதலாகாது.

*சட்டமுறையற்ற வகையில் விலங்குகளின் இனப்பெருக்க ஆற்றலை அழித் தல் அல்லது அவற்றை மலடாக்குதல் தடைசெய்யப் பட்டுள்ளது.*

**30.** ஆளெவரும் விலங்கொன்றின் இனப்பெருக்க ஆற்றலை அழித்தல், அல்லது அதனை மலடாக்குதல் விலங்கின மருத்துவர் ஒருவரால் அல்லது அவரது மேற்பார்வையின்கீழ் புரியப் பட்டாலன்றி அத்தகைய விலங்கின இனப்பெருக்க ஆற்றலை அழித்தலோ அதனை மலடாக்குதலோ அல்லது இனப் பெருக்க ஆற்றலை அழிக்கச் செய்வித்தலோ அல்லது அதனை மலடாக்கச் செய்வித்தலோ ஆகாது.

*வேதனையினால் பீடிக்கப்பட்ட விலங்கின் சட்டமுறையற்ற விற்பனை தடை செய்யப்பட் டுள்ளது.*

**31.** சுகயீனத்தினால், நோயினால், அவயத்தின் சிதைவினால், பட்டினியால், தாகத்தால், அளவுக்கதிகமான நெரிசலினால் அல்லது கொடூரமாக நடத்தப்படுவதனால் வேதனையை அனுபவித்துக்கொண்டிருக்கும் ஏதேனும் விலங்கை ஆளெவரும், மருத்துவச் சிகிச்சை மற்றும் பராமரிப்பு நோக்கத்துக்காகத் தவிர, விற்பனை செய்தலோ அல்லது விற்பனைக்கு முனைதலோ அல்லது விற்பனை செய்வதற்கான ஒப்பந்தஞ் செய்தலோ ஆகாது.

*விற்பனைக்காக விலங்கைச் சட்டமுறையற்ற வகையில் வைத்திருத்தல் அல்லது வெளிக் காட்டிவைத்தல் தடைசெய்யப் பட்டுள்ளது.*

**32.** ஆளெவரும், ஏதேனும் விலங்குக்கு வேதனையை அல்லது துன்பத்தை விளைவிக்கக்கூடிய அத்தகைய சூழ்நிலைகளில் அவ்விலங்கை விற்பனைக்கு வைத்திருத்தலோ அல்லது விற்பனைக்கு வெளிக்காட்டிவைத்தலோ ஆகாது.

*வேட்டையாடுதல் முதலியவற்றுக் காக விலங் கொன்றைக் கிடைக்கக் கூடியதாக்குதல் தடைசெய்யப் பட்டுள்ளது.*

**33.** ஆளெவரும், இன்னொரு விலங்கினால் வேட்டையாடப் படும், ஊறுவிளைவிக்கப்படும் அல்லது கொல்லப்படும் நோக்கத்துக்காக எத்தகையதுமான எம்முறையிலேனும் விலங் கொன்றைக் கிடைக்கக்கூடியதாக்குதலாகாது.

*சட்டமுறையற்ற வகையில் இனப் பெருக்கத்துக்காக வளர்த்தல் அல்லது வியா பாரஞ்செய்தல் தடைசெய்யப் பட்டுள்ளது.*

**34.** ஆளெவரும், விலங்குகளை இனப்பெருக்கத்துக்காக வளர்த்தல் அல்லது வியாபாரஞ் செய்தல் என்ற தொழிலை, சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு அதற்கான உரிம மொன்றைப் பெறாமல் கொண்டுநடத்துதலாகாது.

*தடை செய்யப்பட்ட நடத்தையில் ஈடுபடுவதற்கான தண்டனை.*

**35.** இருபத்தேழு முதல் *34* வரையிலான பிரிவுகளில் அடங்கியுள்ள தடைகளுள் எவற்றையும் மீறிச் செயலாற்றுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இருபதாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*தடை செய்யப்பட்ட நிகழ்ச்சிகள்.*

**36.** (1) ஆளெவரும், (இதனகத்துப்பின்னர் "ஒரு தடை செய்யப்பட்ட நிகழ்ச்சி" எனவழைக்கப்படும்) பின்வரும் நிகழ்ச்சிகளுள் எதிலும் பங்குபற்றுதலோ அதனை ஒழுங்கு செய்தலோ முகாமைசெய்தலோ வசதிப்படுத்துதலோ அல்லது விளம்பரம் செய்தலோ ஆகாது :-

(அ) விலங்குகளின் உயிர்களுக்கு ஊறுவிளைவிக்கின்ற அல்லது அழிவை ஏற்படுத்துகின்ற விளையாட்டு வேட்டை அல்லது வேறு ஏதேனும் வகையான பொழுதுபோக்கு விளையாட்டு ;

(ஆ) விலங்கொன்று சுடப்படுகின்ற அல்லது வேட்டையாடப்படுகின்ற நோக்கத்திற்கு எந்த குறிவைத்து சுடும் பந்தயத்தில் அல்லது போட்டியில் விலங்கொன்று அதன் அடைக்கப்பட்ட நிலையிலிருந்து விடுவிக்கப்படுகின்றதோ அந்த ஏதேனும் குறிவைத்துச் சுடும் பந்தயம் அல்லது போட்டி ; அல்லது

(இ) ஏதேனும் விலங்கை (விலங்கொன்றைக் கட்டி வைத்தல் உட்பட) வேறு ஏதேனும் விலங்கிற்கு இரையாக்கும் வகையில் அல்லது ஏதேனும் விலங்கை வேறு ஏதேனும் விலங்குடன் சண்டையிடத் தூண்டும் வகையில் அதனை அடைத்துவைப்பதனை உட்படுத்தும் ஏதேனும் விளையாட்டு நிகழ்ச்சி அல்லது களியாட்டம்.

(2) ஆளெவரும், அவர் எந்த வளவுகளின் சொந்தக்காரராகவுள்ளாரோ அல்லது எந்த வளவுகளுக்குப் பொறுப்பாகவுள்ளாரோ அந்த வளவுகளைத் தடைசெய்யப்பட்ட நிகழ்ச்சியொன்றுக்காகப் பயன்படுத்தப்படுவதற்கு அறிந்துகொண்டு அனுமதித்தலாகாது.

(3) ஆளெவரும், ஏதேனும் விலங்கைத் தடைசெய்யப்பட்ட நிகழ்ச்சியொன்றுக்காக அறிந்துகொண்டு வழங்குதலோ அல்லது பயிற்றுவித்தலோ ஆகாது.

(4) முற்போந்த உட்பிரிவுகளுள் எவற்றினதும் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இருபதாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்திற்கான மறியற்தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். தண்டம்.

**ஆடுகள், மாடுகள் மற்றும் எருமைகளை கொல்லுதல் தண்டனைக்குரிய விடயமாகும்.**

**37.** (1) ஆளெவரும் -

(அ) ஏதேனும் எருமையை அல்லது எருமைக்கன்றை ;

(ஆ) ஏதேனும் பசுவை ;

(இ) ஏதேனும் மாட்டை அல்லது ஆண்கன்றை

அறுத்தலோ அல்லது அறுக்கச் செய்தலோ அறுக்க அனுமதித்தலோ ஆகாது.

(2) இப்பிரிவில் “எருமை” என்னும் சொல்லமைப்பு ஓர் ஆண் மற்றும் பெண் எருமையை உள்ளடக்குவது “எருமைக்கன்று” என்னும் சொல்லமைப்பு ஓர் ஆண் மற்றும் பெண் எருமைக் கன்றையும் உள்ளடக்கும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத வொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனை அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

**நான்குகால் விலங்குகளை அறுத்தல் தொடர்பான நிபந்தனைகள்.**

**38.** (1) ஏதேனும் நான்கு கால் விலங்கை அறுப்பதற்கான உரிமங்களை அளித்தல் தொடர்பாக வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆளெவரும், தனிப்பட்ட வாழ்மனையொன்றில் அல்லது தொழிலிடமொன்றில் அல்லது பொது இடமொன்றில் நான்கு கால் விலங்கொன்றை அறுத்தலோ அல்லது அறுக்கச்செய்தலோ ஆகாது.

(2) ஏதேனும் நான்கு கால் விலங்கின் இறைச்சி அல்லது உடம்பின் ஏதேனும் பாகம் எத்தகையதுமான எந்நோக்கத்துக் காகவும் விற்பனை செய்யப்படுவதற்கு அல்லது விநியோகிக் கப்படுவதற்குக் கருதப்படுமிடத்து, ஆளெவரும், விலங்குகளை அறுப்பதில் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட தகுதிச்சான்றிதழொன்றை வைத்திருந்தா லொழிய, அத்தகைய ஆள் அந்த நான்கு கால் விலங்கை அறுத்த லாகாது.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், இருபதாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஓராண்டுக்கானவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காகப் "பொது இடம்" என்பது, பொதுவழியொன்றாகவிருப்பினுஞ்சரி இல்லாதிருப்பினுஞ்சரி, ஏதேனும் வழியையும், வீதியையும், ஒழுங்கையையும், சதுக்கத்தையும், முற்றத்தையும், சந்துவழியையும், செல்வழியையும் அல்லது திறந்தவெளியையும் அத்துடன் பொதுமக்கள் அணுகுகின்ற கட்டிடத்தையும் உள்ளடக்கும்.

## பாகம் IX

### விலங்குகளை ஏற்றிச் செல்லல்

**39.** ஆளெவரும், ஏதேனும் விலங்கை, அதனை அவசியமற்ற வேதனைக்கு உட்படுத்துகின்றவாறான அத்தகைய முறையில் கொண்டு செல்லுதல், எடுத்துச் செல்லுதல் அல்லது ஏற்றிச் செல்லுதல் அல்லது கொண்டு செல்லுவித்தல், எடுத்துச் செல்லுவித்தல் அல்லது ஏற்றிச் செல்லுவித்தல் ஆகாது.

*ஏற்றிச் செல்லும்போது விலங்கை அவசியமற்ற வேதனைக் குட்படுத்துதல் தடை செய்யப் பட்டுள்ளது.*

**40.** முற்போந்த ஏற்பாட்டின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவது ஏதேனும் விலங்கைக் கொண்டுசெல்லும், எடுத்துச்செல்லும் அல்லது ஏற்றிச்செல்லும் எவரேனும் ஆளின் கடமையாதல் வேண்டும் :-

*விலங்குகளை ஏற்றிச் செல்லும் போதான கடமைகள்.*

(அ) ஏற்றும்போதும் இறக்கும்போதும் அத்தகைய விலங்கிற்கு ஊறு ஏற்படுவதைத் தவிர்த்தல் ;

(ஆ) ஏற்றப்படும் நேரத்திலிருந்து இறக்கப்படும் நேரம்வரை அத்தகைய விலங்கு இடைப்போக்கிலுள்ள காலப்பகுதியின்போது அதற்குப் போதிய இடவசதி, காற்றோட்டம், சுகாதார நிலைமைகள், நியாயமான சௌகரியம் என்பன உறுதிசெய்யப்படுதல் ;

(இ) (i) சுகவீனமுற்ற ; அல்லது

(ii) கருத்தரித்திருந்து இடைப்போக்கில் அல்லது அதன் பின்னர் நாற்பத்தெட்டு மணித்தியாலங் களுக்குள் குட்டியொன்றை ஈனக்கூடிய நியாய மான சாத்தியமுள்ள,

விலங்கெதுவும், மருத்துவச் சிகிச்சை நோக்கங் களுக்காக அல்லது விலங்கின் சொந்தக் காப்புக்காகத் தவிர, அவ்வாறு கொண்டுசெல்லப்படாதிருத்தல், எடுத்துச் செல்லப்படாதிருத்தல் அல்லது ஏற்றிச் செல்லப்படாதிருத்தல் ;

(ஈ) விலங்கைக் கொண்டுசெல்வதற்கு, எடுத்துச்செல் வதற்கு அல்லது ஏற்றிச்செல்வதற்குப் பயன்படுத்தப் படும் ஏதேனும் வாகனம் –

(i) அதன்கண் ஏற்றிச்செல்லப்படும் விலங்கை இலகுவாக அவதானிக்கக்கூடியவையும் பரிசோதிக்கக்கூடியவையுமான வசதிகளையும் ; அத்துடன்

(ii) அத்தகைய விலங்கை மனிதாபிமான முறையில் ஏற்றுவதற்கும் இறக்குவதற்குமான சாய்தள மொன்றையும்,

கொண்டிருத்தல் ;

(உ) ஏதேனும் விலங்கை அவ்வாறு கொண்டுசெல்வதற்கு, எடுத்துச்செல்வதற்கு அல்லது ஏற்றிச்செல்வதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் வாகனத்தின் தளம், அத்தகைய விலங்கிற்கு ஊறுவிளைவிக்கும் சாத்திய முள்ள துவாரங்களோ வெடிப்புகளோ இல்லா திருத்தல்;

(ஊ) ஏதேனும் விலங்கை அவ்வாறு கொண்டுசெல்வதற்கு, எடுத்துச்செல்வதற்கு அல்லது ஏற்றிச்செல்வதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் வாகனம், ஏற்றிச்

செல்லப்படும் விலங்கின் வகை, பிரயாணஞ்செய்ய வேண்டிய தூரம், காலநிலை, வெப்பநிலை மற்றும் நில இயலின் தனித்தன்மை போன்ற சூழல்சார் காரணிகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு, சூழ்நிலைகளுக்குத் தோதானவாறான அத்தகைய பாதுகாப்பை அத்தகைய விலங்குக்கு வழங்குவதற்குப் போதியளவு மூடுகையைக் கொண்டிருத்தல் ;

(எ) மூர்க்கத்தனம் கொள்ளக்கூடிய விலங்கு எதுவும் வேறு விலங்குகளுடன் சேர்த்துக் கொண்டுசெல்லப்படும் போது, எடுத்துச்செல்லப்படும்போது அல்லது ஏற்றிச்செல்லப்படும்போது, அத்தகைய விலங்கு அத்தகைய வேறு விலங்குகளைத் தாக்குவதை அல்லது அவற்றுக்குத் தீங்கு அல்லது ஊறுவிளை விப்பதைத் தடுப்பதற்குப் போதிய முற்காப்பு எடுக்கப்பட்டிருந்தாலொழிய, அத்தகைய விலங்கு ஏனைய விலங்குகளுடன் கொண்டுசெல்லப்படா திருத்தல், எடுத்துச்செல்லப்படாதிருத்தல் அல்லது ஏற்றிச்செல்லப்படாதிருத்தல் ;

(ஏ) ஏற்றப்படும் இடத்திலிருந்து இறக்கப்படும் இடம்வரை அத்தகைய கொண்டுசெல்லுதல், எடுத்துச்செல்லுதல் அல்லது ஏற்றிச்செல்லுதல், அவசியமற்ற தாமத மின்றியும் ஏதேனும் விலங்கை நியாயமற்ற காலப் பகுதிக்கு அடைத்துவைக்காமலும் நிறைவேற்றப் படுதல் ;

(ஐ) ஏற்றிச்செல்லப்படும்பொழுது விலங்கிற்கு உணவும் நீரும் கொடுக்கப்படுதலாகாது எனப் போக்குவரத்து நிபந்தனைகள் தேவைப்படுமிடத்து, உணவோ அல்லது நீரோ இன்றி அவ்விலங்கினால் தாங்கிக் கொள்ளக்கூடியதைவிட நீண்டநேரத்திற்குப் பிரயாணம் நீடிக்கமாட்டாது என்பதை உறுதிப் படுத்துவதற்குக் கவனமெடுத்தல் ;

(ஒ) நீண்ட பிரயாணங்களின்போது செயல்முறைக்குகந்த விடத்து விலங்கிற்கு ஓய்வும், உணவும் நீரும் வழங்கப் படுவதையும் அதன் சுகாதாரத்தைக் கவனிப்பதையும் இயலச்செய்வதற்குப் போதிய நிறுத்தங்கள் செய்யப் படுதல்.

தண்டம்.

**41.** (1) முப்பத்தொன்பதாம் பிரிவின் அல்லது 40 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது அவற்றை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரி னாலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற் றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற் றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) இப்பாகத்தின்கீழான தவறொன்றுக்காக எவரேனுமாளுக் குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், நீதிவான், (1) ஆம் உட்பிரி வின்கீழ் விதிக்கப்படும் ஏதேனும் தண்டனைத் தீர்ப்பிற்கு மேலதிக மாகவும் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமையவும், தவறைப் புரிவதில் பயன்படுத்தப்பட்ட வாகனத்தையும் அதன்கண்ணுள்ள விலங்கையும் அல்லது விலங்குகளையும் இழப்பிப்பதற்கான கட்டளையொன்றை ஆக்கலாம்.

(3) வாகனத்தின் சொந்தக்காரர், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளின் வாழ்க்கைத்துணையாக அல்லது பிள்ளையாகவிராத மூன்றாம் திறத்தவரொருவராக இருக்குமிடத்து (1) ஆம் பந்தியின்கீழான இழப்பித்தற் கட்டளையொன்று ஏன் ஆக்கப்படுதலாகாதெனக் காரணங்காட்டும்படி அத்தகைய சொந்தக்காரருக்கு அறிவித்தல் கொடுத்த பின்னர் மட்டுமே அத்தகையவொரு கட்டளை ஆக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வாகனம் தவறு புரியப்படுவதில் பயன்படுத்தப் படுவதைத் தடுப்பதற்குத் தாம் எல்லா முற்காப்புகளையும் எடுத்துள்ளாரென அல்லது தவறைப் புரிவதற்குத் தமக்குத் தெரியாமலேயே வாகனம் பயன்படுத்தப்பட்டுள்ளதெனச் சொந்தக்காரர் நீதிமன்றம் திருப்தியுறும்வகையில் நிலைநாட்டு வாராயின், அத்தகைய கட்டளை எதுவும் ஆக்கப்படுதலுமாகாது:

ஆயின், வாகனமானது, எந்த ஆளின் வாகனம் மூன்றாம் தடவையாக ஒரு தவறைப் புரிவதற்காகப் பயன்படுத்தப்பட் டுள்ளதோ அந்த ஆளுக்குச் சொந்தமாக இருக்குமிடத்து, நீதிவானானவர், அத்தகைய வாகனத்தை இழப்பிப்பதற்கான கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(4) நீதிமன்றக் கட்டளையொன்றின்மூலம் அரசுக்கு இழப்பிக்கப்பட்ட ஏதேனும் வாகனம் அல்லது விலங்கு –

(அ) அத்தகைய கட்டளைக்கெதிராக மேன்முறையீடு எதுவும் செய்யப்படாவிடின் அத்தகைய கட்டளைக்கெதிராக மேன்முறையீடொன்று செய்யப்படுவதற்கு விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவுற்ற தேதியிலிருந்து முழுமையாக அரசுக்கு உரித்தாதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய கட்டளைக்கெதிராக மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருப்பின், மேன்முறையீட்டின்மீது அக்கட்டளை இறுதியாக உறுதிப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து முழுமையாக அரசுக்கு உரித்தாதல் வேண்டும் ; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி கையாளப்படுதல் வேண்டும்.

## பாகம் X

## விஞ்ஞான நோக்கங்களுக்கு உயிருடனுள்ள விலங்கினங்களைப் பயன்படுத்துதல்

*பரிசோதனைகள் முதலியவற்றுக்காக உயிருடனுள்ள விலங்கினங்களைப் பயன்படுத்துதல்.*

**42.** (1) ஆளெவரும் சொல்லப்பட்ட நோக்கத்திற்காக அதிகாரசபையிடமிருந்து அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றிருந்தாலொழிய, உயிருள்ள விலங்கினங்கள் எவற்றையும் கற்பித்தலுக்காக அல்லது ஆராய்ச்சிக்காக அல்லது பரிசோதனைக்காகப் பயன்படுத்துதலாகாது.

(2) அதிகாரசபையானது அனுமதிப்பத்திரமொன்றை வழங்குகையில், இயைபானவை என அது கருதும் ஏனைய அம்சங்களுள், கணனி மாற்றுருக்கள் மற்றும் வேறு கட்புல, செவிப்புலமுறைகள், செயற்கைமுறையில் தயாரிக்கப்பட்ட மாதிரி உருக்கள், மனித இன ஆராய்ச்சிக்குரிய முண்டங்கள் மற்றும் மருத்துவ அனுபவங்கள் என்பன உட்பட உயிருள்ள விலங்கினங்கள் மீதான பரிசோதனையை உட்படுத்தாத மாற்றுமுறைகளும் உபாயங்களும் கிடைக்கக்கூடியமையைக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

(3) அதிகாரசபையானது, (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய மாற்றுவழிகளைப் பயன்படுத்தி அத்தகைய ஆராய்ச்சியை நிறைவேற்ற முடியும் அல்லது அத்தகைய கற்பித்தலை அல்லது பரிசோதனையைப் புரியமுடியும் எனத் திருப்தியுறுவதன்மீது அனுமதிப்பத்திரமொன்றை வழங்க மறுக்கலாம்.

## பாகம் XI

### புலனாய்வும் குற்றவழக்குத்தொடுப்பும்

**43.** இச்சட்டத்தின்கீழான எல்லாப் புலனாய்வுகளும், இதன்கண் வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்பட்டாலொழிய, 1979ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கியொழுக நடாத்தப்படுதல் வேண்டும்.

புலனாய்வு களுக்காகக் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்புடைமை.

**44.** பொலிசுப் பரிசோதகர் பதவிக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள பொலிசு அலுவலரொருவர் அல்லது பரிசோதகரொருவர் அதற்கான ஆணைப்பத்திரத்தைப் பெற்றபின்னர் –

தேடுகை முதலியன.

(அ) இச்சட்டத்தின்கீழான தவறொன்று புரியப்பட்டுள்ளது, புரியப்படுகின்றது அல்லது புரியப்படப்போகின்றது என நம்புவதற்கு அவருக்குக் காரணமுள்ள எவையேனும் வளவுகளினுட் பிரவேசிக்கலாம் அத்துடன் அவற்றைச் சோதனையிடலாம் ;

(ஆ) அத்தகைய வளவுகளில் பேணப்பட்ட விலங்குகள் தொடர்பான எவையேனும் புத்தகங்களை, இடாப்புகளை அல்லது பதிவேடுகளைப் பரிசோதனை செய்யலாம் ;

(இ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றின் புரிகை அல்லது நிகழவுள்ள புரிகை தொடர்பாக அத்தகைய எவையேனும் வளவுகளிலுள்ள எவரேனுமாளை வினவலாம் :

ஆயின், பெறப்பட்ட தகவலின்மீது, பொலிசுப் பரிசோதகர் பதவிவரிசைக்குக் குறையாத பதவியிலுள்ள பொலிசு அலுவலரொருவர் அல்லது பரிசோதகரொருவர், தவறொன்று புரியப்படுவதனை அல்லது தொடர்ந்து புரியப்படுவதனைத் தடுப்பதற்கு அல்லது இச்சட்டத்தின்கீழான தவறொன்று புரியப்பட்டமை பற்றிய சான்றாகவமையக்கூடிய ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளை அழித்துவிடுவதனைத் தடுப்பதற்கு அல்லது ஏதேனும் விலங்கின் நலம்பேணலை உறுதிப்படுத்துவதற்கு மேலேயுள்ள நடடிவக்கைகளுள் எவற்றையும் எடுத்தல் அவசரமானவகையில் அவசியமாகவுள்ளதெனக் கருதுமிடத்து, ஆணைப் பத்திரமொன்றைப் பெறுமுன்னர் மேலேயுள்ள நடவடிக்கைகளுள் எவற்றையும் எடுத்தல் அத்தகைய பொலிசு அலுவலருக்கு அல்லது பரிசோதகருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பரிசோதகர் அல்லது பொலிசு அலுவலர், அத்தகைய நடவடிக்கையை எடுத்ததிலிருந்து இருபத்திநான்கு மணித்தியாலங்களுள், ஆணைப்பத்திரமொன்றைப் பெறாமல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதனை அனுமதித்த காரணங்களும் பற்றிய அறிக்கையொன்றை நீதிமன்றத்திடம் சமர்ப்பித்தலும் வேண்டும்.

*பரிசோதகர்களினால் விலங்கின நலம்பேணல் பணிப்புகள் வழங்கப்படுதல்.*

**45.** (1) புலனாய்வின் பின்னர், விலங்கொன்று -

(அ) பராமரிக்கப்படாதுள்ளது ;

(ஆ) போதிய உணவும், நீரும், உறைவிடமும் வழங்கப்படாதுள்ளது ;

(இ) வேதனையை அனுபவித்துக்கொண்டுள்ளது ;

(ஈ) விலங்கின மருத்துவச் சிகிச்சை அதற்குத் தேவையாகவுள்ளது ; அல்லது

(உ) வேலைசெய்வதற்குத் தகுதியற்ற நிலையிலிருக்கையில் வேலைசெய்விக்கப்படுகின்றது,

எனப் பரிசோதகரொருவர் நம்புவதற்கு அவருக்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, பரிகரிப்பு நடவடிக்கைகளை எடுக்கும்படியும், குறிப்பாகப் பின்வருவனவற்றுள் ஒன்றையோ அல்லது

பலவற்றையோ செய்யும்படியும் அவ்வாளைத் தேவைப்படுத்தி அவ்விலங்குக்குப் பொறுப்பாகவுள்ள ஆளுக்கு எழுத்திலான பணிப்பொன்றை அவர் வழங்கலாம் :-

(i) பணிப்பில் கூறப்பட்ட முறையில் விலங்கைப் பராமரித்தல் அல்லது நடாத்துதல் ;

(ii) பணிப்பில் கூறப்பட்ட உணவை, நீரை, ஓய்வை, உறைவிடத்தை அல்லது வேறு வாழக்கை நிலைமைகளை அவ்விலங்குக்கு வழங்குதல் ;

(iii) பணிப்பில் விதிக்கப்பட்ட ஒரு தேதிக்கு அல்லது காலத்துக்கு முன்னர் அவ்விலங்கின் நிலைமைபற்றி விலங்கின மருத்துவரொருவருடன் கலந்தாலோசித்தல்;

(iv) மேலே உட்பந்திகள் (i), (ii) அல்லது (iii) இல் கூறப்பட்ட நோக்கங்களுள் எவற்றுக்காகவும் அவ்விலங்குக்கு மீள்வாழிடமளித்தல் ; அல்லது

(v) விதிக்கப்பட்டவொரு காலம்வரை அல்லது விதிக்கப்பட்டவொரு நிகழ்ச்சி இடம்பெறும்வரை, அவ்விலங்கு எவ்விடத்தில் வைத்திருக்கப்படுகின்றதோ அவ்விடத்திலிருந்து அதனை இடமாற்றுவதனைத் தவிர்த்தல்.

*(2)* அத்தகையவொரு பணிப்பு விலங்கின நலம்பேணல் பணிப்பொன்றென அழைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் இருத்தலும் வேண்டும்.

*(3)* ஓராம் உட்பிரிவில் அடங்கியுள்ளதெதுவும், பரிசோதகர், *(1)* ஆம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட பரிகரிப்பு நடவடிக்கைகளுள் எவற்றையும் எடுத்தல் விலங்கின் மிகச்சிறந்த நலனுக்கானதாகவுள்ளதென அத்தகைய பரிசோதகர் அபிப்பிராயப்படுமிடத்து, தாமே அவ்வாறு செய்வதனைத் தடுத்தலாகாது. அத்தகையவொருபட்சத்தில் பரிசோதகர், அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தமைக்கான தமது காரணங்களைப் பதிதல் வேண்டுமென்பதுடன், அவ்விடப்பரப்பின் பொலிசு நிலையத்தில் அப்பொருள்பட பதிவீடொன்றை உடனடியாகச் செய்தலும் வேண்டும்.

(4) நியாயமான காரணமின்றி (1) ஆம் உட்பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட பணிப்பொன்றுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரினாலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று மாதங்களைக் கொண்டவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) ஏதேனும் செயல் அல்லது செய்யாமை தொடர்பில் இப்பிரிவின்கீழ் பணிப்பொன்றை வழங்குதலானது, அத்தகைய செயல் அல்லது செய்யாமை தொடர்பில் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்காகக் குற்றவழக்கொன்றைத் தொடுத்தலை அதுவே பங்கப்படுத்துதலாகாது.

புலனாய்வு, விளக்கம் என்பவற்றின் போது விலங்கின நலம்பேணலை உறுதிப் படுத்துவதற்கு அவற்றை உறைவிடம் முதலியவற்றில் இடுதல்.

**46.** நீதிவானொருவர், ஒரு பொலிசு அலுவலரினால் அல்லது பரிசோதகரினால் அதற்காக விண்ணப்பஞ்செய்யப்படுவதன்மீது அல்லது அவரது சொந்தப் பிரேரணையின்மீது, எந்த விலங்கு தொடர்பில் தவறொன்று புரியப்பட்டுள்ளதெனச் சார்த்தப்படுகின்றதோ, புரியப்பட்டுவருகின்றதோ அல்லது புரியப்படும் சாத்தியம் உள்ளதோ அந்த ஏதேனும் விலங்கை, தவறொன்று தொடர்ந்து புரியப்படுவதனைத் தடுப்பதற்கு அல்லது அத்தகைய விலங்குக்கு அவசியமான பராமரிப்பு அல்லது மருத்துவச் சிகிச்சை வழங்கும் நோக்கத்துக்காக, பொருத்தமான ஆளின், அரச பண்ணையின், விலங்கின உறைவிடத்தின் அல்லது அத்தகைய விலங்கைக் கட்டுக்காப்பினுள் எடுப்பதற்கு விரும்புகின்ற வேறு பொருத்தமான நிறுவனத்தின் பராமரிப்பிலும் கட்டுக்காப்பிலும் இடுதல் அவசியமானதெனத் திருப்திப்படுவதன்மேல், அவ்வாறு செய்யும்படி கட்டளை ஆக்கலாம்.

ஒரு பொலிசு அலுவலருக்கு அல்லது பரிசோதகருக்கு முட்டுக் கட்டடையிடுதல் தவறொன்றாதல்.

**47.** பரிசோதகரொருவர் அல்லது பொலிசு அலுவலரொருவர் இச்சட்டத்தின்கீழ் எவையேனும் தத்துவங்களைப் பிரயோகிப்பதில் அவர்களுக்கு முட்டுக்கட்டையிடும் அல்லது அவர்களை எதிர்க்கும் எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரின் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல்,

மூவாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*எவரினால் குற்றவழக்குகள் தொடுக்கப்பட முடியுமென்பது.*

**48.** இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்கான குற்றவழக்கு –

(அ) சமாதான அலுவலர் ஒருவரால் ; அல்லது

(ஆ) அதிகாரசபையால் ; அல்லது

(இ) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 136(1)(அ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் ஒருவருக்குச் செய்யப்படும் முறைப்பாடொன்றின்மீது,

தொடுக்கப்படலாம்.

*சுருக்க முறையில் விளங்கப்படற்பாலனவான தவறுகள்.*

**49.** இச்சட்டத்தின்கீழான அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழான ஏதேனும் தவறை சுருக்கமுறையில் விளங்குவதும், வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அத்தவறு தொடர்பில் விதித்துரைக்கப்பட்ட தண்டனைகளை விதிப்பதும் நீதிவானொருவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

*குற்றத் தீர்ப்புக்குப் பின்னர் இழப்பிக்கப்படுதல், மற்றும் செலவுகளை மீளக் கொடுத்தல்.*

**50.** (1) விலங்கொன்று தொடர்பாக எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, நீதிவான், விதிக்கக்கூடிய ஏதேனும் தண்டனையுடன் சேர்த்து மேலதிகமாக –

(அ) தவறானது எந்த விலங்கு அல்லது விலங்குகள் தொடர்பில் புரியப்பட்டதோ அந்த விலங்கை அல்லது விலங்குகளை இழப்பிப்பதற்கான ;

(ஆ) தவறுபுரியப்படுவதில் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் ஆயுதத்தை, கருவியை அல்லது வாகனத்தை இழப்பிப்பதற்கான ; அல்லது

(இ) இச்சட்டத்தினது ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஏதேனும் விலங்கு எந்த ஆளின் அல்லது நிறுவனத்தின் பராமரிப்பிலும் கட்டுக்காப்பிலும் இடப்பட்டதோ அந்த எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் நிறுவனத்தினால் உறப்பட்ட செலவுகளை மீளக் கொடுப்பதற்கான,

கட்டளையை ஆக்கலாம்.

(2) நீதிவானானவர், (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழான கட்டளையொன்றை ஆக்குவதில், விலங்கின் பராமரிப்பும் கட்டுக்காப்பும், விடயத்துக்கேற்ப, பொருத்தமான ஆளொருவருக்கு, அரச பண்ணையொன்றுக்கு, விலங்கின உறைவிடமொன்றுக்கு அல்லது வேறு பொருத்தமான நிறுவனத்துக்கு, அத்தகைய ஆளின் அல்லது அத்தகைய பண்ணைக்கு, உறைவிடத்துக்கு அல்லது வேறு நிறுவனத்துக்குப் பொறுப்பாகவுள்ள ஆளின் சம்மதத்துடன் கொடுக்கப்படுதல் வேண்டுமெனப் பணிக்கலாம்.

(3) நாற்பத்தோராம் பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் வாகனமொன்றை இழப்பிப்பதற்கான கட்டளையொன்றுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் XIII

### நானாவிதமானவை

**51.** (1) அமைச்சர் இச்சட்டத்தின் நெறிகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயனளிக்கும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்கு விதிகள்.

(2) குறிப்பாகவும் முற்போந்த தத்துவத்தின் பொதுமைக்குப் பங்கமின்றியும், அமைச்சர், பின்வரும் கருமங்களுள் எவை தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :-

(அ) ஏதேனும் விலங்கினால் தூக்கிச் செல்லப்பட வேண்டிய அல்லது இழுத்துச் செல்லப்பட வேண்டிய ஆகக்கூடிய சுமை ;

(ஆ) ஏதேனும் வாகனத்தில், கூண்டில் அல்லது அடைப்பில் விலங்குகளின் நெரிசலைத் தடுப்பதற்குப் பின்பற்றப்பட வேண்டிய நிபந்தனைகள் ;

(இ) ஏதேனும் வகையான கடிவாளத்தின் அல்லது சேணத்தின் பாவனையை ஒழுங்குபடுத்துதல் ;

(ஈ) இலாடமடிப்பவர் ஒருவரின் தொழிலின் நடாத்துகையை ஒழுங்குபடுத்துதல் ;

(உ) விலங்குகளைப் கைப்பற்றுவதில் எடுக்கப்பட வேண்டிய முற்காப்புகள் ;

(ஊ) விலங்குகளை எந்நிபந்தனைகளின்கீழும் வழிவகைகளின்கீழும் ஏற்றிச்செல்லலாமோ அவை ;

(எ) நீர்வாழ் உயிரினம் தொடர்பான நிபந்தனைகள் ;

(ஏ) இனப்பெருக்கத்துக்காக விலங்குகளை வளர்த்தல், அவற்றுக்குத் தடுப்பூசியேற்றுதல் மற்றும் அவற்றை மலடாக்குதல் ;

(ஐ) பண்ணைப் பறவைகள் தொடர்பான நிபந்தனைகள் மற்றும் செயல்முறைகள் உட்பட, பண்ணை விலங்குகள் தொடர்பான நிபந்தனைகள் ;

(ஒ) வர்த்தக ரீதியில் நடாத்துப்படும் தங்கிட வசதியுடனான நாய்ப்பட்டிகள், செல்லப்பிராணிகளுக்கான விடுதிகள் மற்றும் இவற்றையொத்த வேறு நிறுவனங்கள் ;

(ஓ) விந்தைபுரியும் விலங்குகள் தொடர்பான நிபந்தனைகள் ;

(ஔ) செல்லப்பிராணிக் கடைகள் தொடர்பான நிபந்தனைகள் ;

(க) விலங்கறுமனைகளின் நிபந்தனைகளும் செயல்முறைகளும் ;

(ங) கட்டாக்காலி விலங்குகள் ;

(ச) ஆய்வுப் பூங்காக்களிலுள்ள விலங்குகள் தொடர்பான நிபந்தனைகள் ;

(ஞ) அடைத்துவைக்கப்பட்டிருக்கும் விலங்குகள் தொடர் பான நிபந்தனைகள் ;

(ட) விலங்குகள் மீதான பரிசோதனைகள் தொடர்பான நிபந்தனைகள் :

(ண) பீடைக் கட்டுப்பாடு தொடர்பான நிபந்தனைகள்.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்கு விதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கும் வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதிப்படக்கூடிய வாறான விரைவில் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப் படுதல் வேண்டும். பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலி ருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்க மின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

விலங்கினங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் இடையீடு செய்வதற்கான உரிமை.

**52.** விலங்கொன்று நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளின் விடயப்பொருளாகவருமிடத்து, விலங்கின நலன்களைப் பாதுகாப் பதற்கு நீதிமன்ற வழக்குநடவடிக்கைகளில் இடையீடு செய்வது, அதிகாரசபைக்கு, பரிசோதகரொருவருக்கு அல்லது விலங்கின நலம்பேணல் சங்கமொன்றினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொ ருவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது ஒழுங்குவிதியை மீறுதல் தவறொன்றாகும்.

**53.** இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறுகின்ற ஆளொவ் வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

**54**. இச்சட்டத்தின் கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் புரியப்பட்ட எந்தத் தவறுக்குத் தண்டமெதுவும் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்படவில்லையோ அந்தத் தவறொன்றைப் புரிகின்ற ஆளொவ்வொருவரும், நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன்மேல், ஐயாயிரம் ரூபாவை விஞ்ஞாதவொரு குற்றப் பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

*வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்படாத விடத்து, தவறுகளுக்கான தண்டம்.*

**55**. இச்சட்டத்தின் கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அப்போது -

*ஆட்கள் குழு வொன்றினால் புரியப்படும் தவறுகள்.*

(அ) அந்த ஆட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாயின் அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் அல்லது அலுவலர் ஒவ்வொருவரும் ; அத்துடன்

(ஆ) அந்த ஆட்கள் குழு ஒரு குழுமமாயின், அக்குழுமத்தின் பங்காளர் ஒவ்வொருவரும்,

அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் அல்லது அலுவலர் ஒருவர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளர் ஒருவர், அத்தகைய தவறு தமக்குத் தெரியாமலேயே புரியப்பட்டது என அல்லது அத்தகைய தவறுபுரியப்படுவதைத் தடுப்பதற்குத் தாம் உரிய விழிப்புக் கவனத்தைப் பிரயோகித்தார் என நிலைநாட்டுவாராயின், அவர் அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

**56**. இச்சட்டத்தின் கீழ் தவறொன்று புரியப்படுவதற்கு உடந்தையாகவிருக்கின்ற அல்லது தவறொன்றைப் புரிவதற்கு எத்தனிக்கின்ற அல்லது சதிசெய்கின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், அத்தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்டவாறான அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

*உடந்தையாயிருத்தல் முதலியன தவறொன்றாதல்.*

*குற்றவழக்குத் தொடுப்புக்கான காலத்தை வரையறுத்தல்.*

**57.** இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்ட தவறொன்றுக்கான குற்ற வழக்கு எதுவும், தவறுபுரியப்பட்ட தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்கள் கழிந்த பின்னர் தொடுக்கப்படுதலாகாது.

*விலக்களிப்புக் கள்.*

**58.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள், பீடைக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளுக்கு அல்லது மனித உயிரை அல்லது ஆதனத்தைப் பாதுகாப்பதற்கென எடுக்கப்படும் எவையேனும் நியாயமான வழிமுறைகளுக்கு ஏற்புடையனவாதலாகாது.

*1907 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் கட்டளைச் சட்டத்தை நீக்குதல்.*

**59.** (1) ஆயிரத்துத் தொளாயிரத்து ஏழாம் ஆண்டின் 13 ஆம் இலக்க, விலங்குகளைக் கொடுமைப்படுத்துதலைத் தடுத்தல் கட்டளைச்சட்டம் இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றது. சொல்லப் பட்ட கட்டளைச் சட்டத்தின்கீழ் தொடங்கப்பட்டவையும் அது நீக்கஞ்செய்யப்பட்ட தேதியன்று முடிவுறாதிருப்பவையுமான எல்லாக் குற்றவழக்குகளும், சொல்லப்பட்ட கட்டளைச்சட்டம் இன்னமும் வலுவிலிருக்கின்றதென்றாற்போன்று அதன் ஏற்பாடுகளின்கீழ் தொடர்ந்து நடாத்தப்படுதலும் பூர்த்திசெய்யப் படுதலும் வேண்டும்.

(2) விலங்குகளைக் கொடுமைப்படுத்தலைத் தடுத்தல் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டவையும் அல்லது ஆக்கப்பட்டவையும், இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முற்போந்த நாளன்று வலுவிலிருக்கின்றவையுமான எல்லா ஒழுங்கு விதிகளும், பிரகடனங்களும், கட்டளைகளும், அறிவிப்புகளும், அவை இச்சட்டத்திற்கு ஒவ்வாதனவாக இல்லாதிருக்கும்வரை, தொடர்ந்து வலுவிலிருத்தல் வேண்டுமென்பதுடன், இச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளவையாக அல்லது ஆக்கப் பட்டுள்ளவையாகக் கருதப்படுதலும் வேண்டும் ; அத்துடன் அவை இச்சட்டத்தின்கீழ் நீக்கஞ்செய்யப்படும்வரை அல்லது இல்லா தொழிக்கப்படும்வரை அவ்வாறு தொடர்ந்து வலுவிலிருத்தலும் வேண்டும்.

*விலங்குகள் சட்டத்தின் 38 ஆம் பிரிவின்கீழ் “விலங்கு” என்பதற்கான வரைவிலக்கணம்.*

**60.** (ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான) 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விலங்குகள் சட்டத்தின் 38 ஆம் பிரிவு, “விலங்கு” என்பதற்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

" "விலங்கு" என்பது, கால்நடை (எலஹறக்கா) அல்லது எருமை என்று பொருளாகும் என்பதுடன், 3இ என்னும் பிரிவிலும் பாகம் IV இலும், செம்மறியாடு, வெள்ளாடு, பன்றி அல்லது பண்ணைப் பறவைகள் என்பவற்றையும் உள்ளடக்கும்."

*விலங்குகள் தொடர்பான ஏனைய சட்டங்களுடன் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், இச்சட்டம் மேலோங்கி நிற்றல்.*

**61.** இச்சட்டத்தினதும் விலங்கினங்கள் தொடர்பான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## பாகம் XIII

### பொது

*அதிகாரசபை தகவலைக் கோரலாம்.*

**62.** (1) அதிகாரசபையானது, இச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழும் 15 ஆம் பிரிவின்கீழும் அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் என்பவற்றுள் எவற்றையும் பிரயோகிப்பதனையும், புரிவதனையும், ஆற்றுவதனையும் இயலச்செய்யும் நோக்கத்திற்காக, அதிகாரசபை அல்லது அதன் சார்பில் அதிகார சபையால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், குறித்துரைக்கப்படக்கூடியவாறான ஏதேனும் விலங்கு பற்றிய தகவலை, எழுத்திலான அறிவித்தலில் குறித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் அதிகாரசபைக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்குக் கொடுத்துதவுமாறு அந்த அறிவித்தல் மூலம் எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான அறிவித்தலொன்றின் மூலம் ஏதேனும் தகவலைக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தப்பட்ட எவரேனும் ஆள், ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய தகவலை வெளிவிடுவதற்கு அத்தகைய ஆள் தடைசெய்யப்பட்டிருக்குமிடத்துத் தவிர, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுவது அவரது கடமையாதல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் உறுப்பினர், அலுவலர் அல்லது ஊழியர் எவரும், சட்ட நீதிமன்றமொன்றினால் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்படும்போதன்றி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் தகவலை அதிகாரசபைக்கு வெளியிலுள்ள எவரேனும் ஆளுக்கும் அத்துடன் அதிகாரசபையின் நோக்கங்களுக்காகத் தவிரவும் வெளிவிடுதலாகாது.

*அதிகாரசபை இலஞ்சச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாக விருத்தல்.*

**63.** அதிகாரசபையானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப் படுதலும் வேண்டும்.

*அதிகாரசபையின் உறுப்பினர்களும் அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.*

**64.** அதிகாரசபையின் எல்லா உறுப்பினர்களும் அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக் கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*அசைவுள்ளதும் அசைவற்றதுமான அரச ஆதனம் அதிகாரசபைக்குக் கிடைக்கக் கூடியதாக்கப் படுதல்*

**65.** (1) அரசின் அசைவற்ற ஆதனம் எதுவும் அதிகாரசபையின் ஏதேனும் நோக்கத்திற்காகத் தேவைப்படுமிடத்து, அத்தகைய நோக்கமானது, எந்த நோக்கத்திற்காக முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய ஆதனத்தின் விசேட மானியக்கொடை அல்லது குத்தகையொன்று கொடுக்கப் படலாமோ அந்நோக்கமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், அதிகாரசபைக்கு அத்தகைய ஆதனத்தின் விசேட மானியக் கொடையொன்றுக்கு அல்லது குத்தகையொன்றுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) அரசின் அசைவுள்ள ஆதனம் ஏதுவும் அதிகாரசபையின் ஏதேனும் நோக்கத்திற்காகத் தேவைப்படுமிடத்து அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம், அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் அதிகாரசபைக்குக் கைமாற்றலாம் என்பதுடன், அதற்கு உரித்துமாக்கலாம்.

ஆயின், எவ்வாறாயினும், அரசின் ஏதேனும் அசைவுள்ள ஆதனம் சம்பந்தமான கட்டளை எதுவும், அத்தகைய ஆதனத்தின் மீதான கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள அமைச்சரின் ஒருப் பாடின்றி இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் அமைச் சரால் ஆக்கப்படுதலாகாது.

*காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல்*

**66.** (1) அதிகாரசபையின் ஏதேனும் குறித்த நோக்கத்திற்காக அசைவற்ற ஆதனம் எதுவும் கொள்ளப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுமிடத்தும், அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின்மூலம் அந்நோக்கத்திற்கான உத்தேசக் கொள்ளுதலை அங்கீகரிக்குமிடத்தும், அவ்வாதனம் பகிரங்க நோக்கமொன்றுக்காகத் தேவைப்படுகின்றதெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் கொள்ளப்பட்டு அதிகாரசபைக்குக் கைமாற்றவும்படலாம்.

(2) அதிகாரசபைக்காகக் காணிகொள்ளுதற் சட்டத்தின்கீழ் ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் கொள்ளுதலுக்குச் செலுத்தப் படற்பாலதான ஏதேனும் பணத்தொகை அதிகாரசபையின் நிதியத் திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகார சபையின் பணிப்பின்மீது எடுக்கப்படும் வழக்குக்கான பாதுகாப்பு.*

**67.** (1) (அ) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையால் நல்லெண் ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்ட தாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக அதிகாசபைக்கெதிராக, அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின்மீது அவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள் ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக அதிகாரசபை யின் எவரேனும் உறுப்பினருக்கு, அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கெதிராக,

துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(2) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின் மீது அத்தகைய எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில்

அவருக்கெதிராகத் தொடுக்கப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக அவரினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்மானித்தால் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*அமைச்சருக்குத் தகவலைக் கொடுத்து தவுதல்.*

**68.** அமைச்சரானவர், அதிகாரசபையின் வேலை தொடர்பிலான விவரத்திரட்டுக்களையும், கணக்குகளையும், வேறு தகவலையும் அமைச்சர் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அமைச்சருக்குக் கொடுத்துதவுமாறு அதிகாரசபையைத் தேவைப்படுத்தலாம் அல்லது பணிக்கலாம் என்பதுடன் அதிகாரசபை அத்தகைய பணிப்பு ஒவ்வொன்றையும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

*ஆண்டறிக்கை.*

**69.** அதிகாரசபையானது, அதிகாரசபையின் நிதியாண்டு ஒவ்வொன்றினதும் முடிபின் பின்னர் நான்கு மாதங்களுக்குள், அவ்வாண்டின்போது அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகித்தமை மற்றும் அதிகாரசபை புரிந்தமை பற்றியும் அதன் கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டம் பற்றியுமான அறிக்கையொன்றைத் தேசிய மொழிகளில் வெளியிடுதல் வேண்டுமென்பதுடன், அமைச்சருக்குச் செய்தலும் வேண்டும். அத்தகைய அறிக்கையின் பிரதியொன்றை அமைச்சர் பாராளுமன்றத்தின் முன்னர் இடுதல் வேண்டும்.

## பாகம் XIV

### பொருள்கோடல்

*பொருள் கோடல்.*

**70.** இச்சட்டத்தின் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய –

"விலங்கு" என்பது மனிதனைத் தவிர ஏனைய ஏதேனும் உயிருள்ள பிராணி என்று பொருள்படும் என்பதுடன் இதனகத்துப்பின்னர் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு வீட்டு விலங்கொன்றையும், பண்ணை விலங்கொன்றையும், அடைத்துவைக்கப்பட்ட விலங்கொன்றையும், வனவிலங்கொன்றையும், உடனிருக்கும்

விலங்கொன்றையும், கட்டாக்காலி விலங்கொன்றையும், உணவுக்கான விலங்கொன்றையும் உள்ளடக்கும் ;

“அடைத்துவைக்கப்பட்ட விலங்கு” என்பது, வீட்டு விலங்கொன்று அல்லது பண்ணை விலங்கொன்று தவிர, வேலைக்காயினுஞ் சரி, விழா சார்ந்த அல்லது வேறு ஏதேனும் நோக்கத்திற்காயினுஞ் சரி, ஒரு மிருகக் காட்சிச்சாலையில் அல்லது வித்தைக்கூடத்தில் அல்லது அடைத்துவைக்கப்பட்டிருக்கும் வேறுநிலையில் வைக்கப்பட்ட விலங்கு என்று பொருள்படும் ;

“விலங்கின உறைவிடம்” என்பது, விலங்குகளைப் காப்பாக வைப்பதற்கும் பேணுவதற்கும் பயன்படுத்தப்படும் ஓர் உறைவிடம், தேற்றுதல் நிலையம் அல்லது வேறு ஏதேனும் இடம் அல்லது இடைப்போக்கு நிலையம் என்று பொருள்படும் ;

“அதிகாரசபை” என்பது இச்சட்டத்தின் பாகம் II இன் கீழ் தாபிக்கப்படும் தேசிய விலங்கின நலம்பேணல் அதிகாரசபை என்று பொருள்படும் ;

“ஆயுர்வேத மருத்துவப்பேரவை” என்பது, 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஆயுர்வேத மருத்துவப் பேரவைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவப் பேரவை என்று பொருள்படும் ;

“கூண்டு” என்பது அடைப்பு, நாய்க்கூடு, கூடாரம் மற்றும் இதனையொத்த வேறு தங்கிடம் ஒன்றையும் உள்ளடக்கும்;

“மத்திய சூழல் அதிகாரசபை” என்பது, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகாரசபை என்று பொருள்படும் ;

“தவிசாளர்” என்பது இச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அதிகாரசபையின் தவிசாளர் என்று பொருள்படும் ;

"உடனிருக்கும் விலங்கு" என்பது ஒரு வழிகாட்டியாக அல்லது செல்லப்பிராணியாக வைத்திருக்கப்படும் விலங்கொன்றையும் உள்ளடக்கும் ;

"அடைத்துவைத்தல்" என்பது விலங்கொன்று தொடர்பாக, பின்வருவன உட்பட அதன் நடமாட்டச் சுதந்திரத்தை மட்டுப்படுத்துதல் என்று பொருள்படும் :

(அ) அணுகுகை மற்றும் நடமாட்டச் சுதந்திரத்தை மட்டுப்படுத்தும் வகையில் ஒரு கூண்டில், குழியில், முற்றத்தில், வயலில் அல்லது வேறு அடைப்பில் வைப்பதன்மூலம் ; அத்துடன்

(ஆ) சிறகைக் கத்தரித்தல், கட்டிவைத்தல் அல்லது வேறு முறையிலான மட்டுப்பாட்டின்மூலம் ;

"பணிப்பாளர்" என்பது இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் என்று பொருள்படும் என்பதுடன் பிரதிப் பணிப்பாளர் ஒருவரையும் உதவிப்பணிப்பாளர் ஒருவரையும் உள்ளக்கும்.

"வீட்டு விலங்கு" என்பது,-

(i) அவ்விலங்கு இயைபான நேரத்தில் செல்லப் பிராணியொன்றாக வைத்திருக்கப்படினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி பொதுவாகச் செல்லப் பிராணியாக வைத்திருக்கப்படும் இனத்தைச் சேர்ந்த விலங்கொன்று ;

(ii) ஏதேனும் இனத்தைச் சேர்ந்த விலங்கொன்று செல்லப்பிராணியொன்றாக வைத்திருக்கப்பட்டிருப்பின் அவ்வினத்தைச் சேர்ந்த விலங்கொன்று;

(iii) சவாரிசெய்வதற்கு அல்லது ஓட்டப் பந்தயத்திற்கு, ஏறிச்செல்வதற்கு, வேலைக்கு, இனப் பெருக்கத்துக்காக வளர்ப்பதற்கு அல்லது வெளிக் காட்டிவைப்பதற்குப் பயன்படுத்தப்படும் விலங்கொன்று ;

(iv) ஒரு பாதுகாப்பாக அல்லது வழிகாட்டியாக அல்லது உடனிருக்கும் விலங்கொன்றாகப் பயன்படுத்தப்படும் விலங்கொன்று,

என்று பொருள்படும் ;

"பண்ணை விலங்கு" என்பது கமத்தொழில் அல்லது பாற்பண்ணை அல்லது கால்நடை நோக்கங்களுக்காக வைத் திருக்கப்படும் அல்லது பயன்படுத்தப்படும் விலங்கொன்று என்று பொருள்படும் எனபதுடன், பண்ணைப் பறவைகளையும் உள்ளடக்கும் ;

"உணவுக்கான விலங்கு" என்பது, எந்த விலங்கின் மாமிசம் மனிதர்களினால் உணவாக உட்கொள்ளப்படுகின்றதோ அந்த விலங்கொன்று என்று பொருள்படும் ;

"பரிசோதகர்" என்பது, 16 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட விலங்கின நலம்பேணல் பரிசோதகர் ஒருவர் என்று பொருள்படும் ;

"கொடூரமாக நடாத்துதல்" என்பது, விலங்கொன்று தொடர்பாக, அதன் வகையில் அல்லது அளவில், அல்லது அதன் குறிக்கோளில், அல்லது அது புரியப்படும் சூழ்நிலைகளில் கொடுமையானதாகவுள்ள ஏதேனும் செயலால் அல்லது செய்யாமையால் விலங்கொன்று வேதனை அல்லது துன்பம் உறுவதனை விளைவித்தல் என்று பொருள்படும் ;

"தேற்றுதல் நிலையம்" என்பது, நோயுற்ற, வயதான அல்லது ஊனமுற்ற விலங்கினங்களை வைத்திருப்பதற்கெனத் தாபிக்கப்பட்ட உறைவிடம் என்று பொருள்படும் ;

"உள்ளூரதிகாரசபை" என்பது ஒரு மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேசசபை என்று பொருள்படும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் சபையால் பிரயோகிக்கப்படும், புரியப்படும் அத்துடன் ஆற்றப்படும் தத்துவங்களுக்கு, கடமைகளுக்கு அல்லது பணிகளுக்கு நேரொத்த அல்லது அவற்றையொத்த தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கென, புரிவதற்கென அல்லது ஆற்றுவதற்கென ஏதேனும் சட்டத்தால் அல்லது அதன்கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும் ;

"அமைச்சர்" என்பது விலங்கின நலம்பேணல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் என்று பொருள்படும் ;

"அளவுக்கதிகமாக நடாத்திச் செல்கின்ற" என்பது, விலங்கொன்று தொடர்பாக, கொடுமையான அல்லது துன்ப மேற்படுத்தும் நிலைமைகளின்கீழ் வலோத்காரமாக நடக்கவைத்தல் என்று பொருள்படும் ;

"வேதனை" என்பது, துன்பத்தையும் உள அல்லது உடல் துயரத்தையும் உள்ளடக்கும் ;

"சமாதான அலுவலர்" என்பது பொலிசு அலுவலர்களையும் பொலிசுக் கடமைகளைப் புரிவதற்கெனப் பிரதேச செயலாளரால் எழுத்தில் நியமிக்கப்பட்ட கிராம அலுவலர்களையும் உள்ளடக்கும் ;

"ஆள்" என்பது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் ஆட்கள் குழுவையும் உள்ளடக்கும் ;

"விலங்கொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள ஆள்" என்பது,–

(அ) விலங்கைச் சொந்தமாக வைத்துள்ள அல்லது அதற்கு அல்லது அதன்மீது குத்தகை, உரிமம் அல்லது வேறு உரித்தாண்மை உரிமை கொண்டுள்ள ; அல்லது

(ஆ) சட்டமுறையிலாயினுஞ்சரி, வேறுவகையிலாயினுஞ்சரி, விலங்கைக் கட்டுக்காப்பைக் கொண்டிருக்கின்ற,

ஆளொருவர் என்று பொருள்படும் ;

"சிறகை கத்தரித்தல்" என்பது பறவையொன்று தொடர்பாக, பறவையொன்றின் சிறகை ஊனமடையச் செய்கின்ற அல்லது பறவையொன்றின் சிறகினது ஒரு பாகத்தை அகற்றிவிடுகின்ற என்று பொருள்படும் ;

''உடைமை கொள்ளல்'' என்பது கட்டுப்பாட்டையும் கட்டுக்காப்பையும் உள்ளடக்கும் ;

"விதித்துரைக்கப்பட்ட" என்பது இச்சட்டத்தினால் அல்லது இதன்கீழ் விதித்துரைக்கப்பட்ட என்று பொருள்படும் ;

"ஆராய்ச்சி" என்பது, விலங்கொன்று தொடர்பாக, விலங்கொன்று அதில் பயன்படுத்தப்படும் ஒரு பரிசோதனை, நடவடிக்கைமுறை, பரீட்சிப்பு அல்லது ஆய்வு என்று பொருள்படும் என்பதுடன், விலங்கொன்றை அறுவை மருத்துவ, மருத்துவ, உளவியல், உயிரியல், இரசாயனவியல் அல்லது உடலியல் சார்ந்த சிகிச்சைக்குட்படுத்துதலையும் உள்ளடக்கும் ;

"கட்டாக்காலி விலங்கு" என்பது, ஒரு தெருவில், வீதியில் அல்லது ஏதேனும் பொது இடத்தில் அலைந்து திரிகின்ற, கட்டுப்பாடற்ற விலங்கொன்று அல்லது கைவிடப்பட்ட விலங்கொன்று அல்லது வனவிலங்கொன்றாகவிராத விலங்கொன்று என்று பொருள்படும்;

"பொறி" என்பது விலங்கொன்றைக் கொல்லுகின்ற பொறியில் அகப்படவைக்கின்ற, சிக்கவைக்கின்ற, தடுத்து வைக்கின்ற அல்லது அதன் நடமாட்டத்தைத் தடுக்கின்ற நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் ஒருவலை, கூண்டு, கண்ணி, தொழுவம், கிடங்கு அல்லது மின்சார உபாயம் அல்லது இயந்திர நுட்பப்பொருள் என்று பொருள்படும் ; ஆனால்

(i) விலங்கொன்றைக் கையாளுவதற்கு, மேய்ப்பதற்கு அல்லது ஒருங்குதிரட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் வேலி அடைக்கப்பட்ட காணி இடப்பரப்பை அல்லது வேறு பயனுறுதியுள்ள அடைப்பை ; அல்லது

(ii) விலங்கொன்றை ஏற்றிச்செல்வதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு கூண்டைப்போன்ற ஏதேனும் அடைப்பை,

உள்ளடக்காது ;

"பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்று பொருள்படும் ;

"வாகனம்" என்பது விலங்கொன்றை ஏற்றிச்செல்வதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் போக்குவரத்துச் சாதனம் என்று பொருள்படும் ;

"இலங்கை விலங்கின மருத்துவப் பேரவை" என்பது 1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விலங்கின மருத்துவர்கள் மற்றும் தொழிலர்கள் சட்டத்தினால் அமைக்கப்பட்ட இலங்கை விலங்கின மருத்துவப் பேரவை என்று பொருள்படும் ;

"விலங்கின மருத்துவர்" என்பது 1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விலங்கின மருத்துவர்கள் மற்றும் தொழிலர்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட விலங்கின மருத்துவரொருவர் என்று பொருள்படும் என்பதுடன், விலங்கின மருத்துவத் தொழிலர் ஒருவரையும் உள்ளடக்கும் ;

"விலங்கொன்றின் விலங்கினச் சிகிச்சை" என்பது -

(i) விலங்கொன்றின் நிலைமைபற்றி விலங்கின மருத்துவரொருவருடன் கலந்தாலோசித்தல் ;

(ii) விலங்கின மருத்துவர் ஒருவரால் விலங்கொன்றின்மீது புரியப்படும் மருத்துவ அல்லது அறுவை மருத்துவ நடவடிக்கைமுறை ; அல்லது

(iii) விலங்கொன்றின்மீது புரியப்படும் குணப்படுத்தும் இயல்பினதான ஒரு மருத்துவ நடவடிக்கைமுறை,

என்று பொருள்படும் ;

"விலங்கொன்றின் நலம்பேணல்" என்பது விலங்கொன்றின் சுகாதாரம், காப்பு, மற்றும் நலம் என்பவற்றையும் உள்ளடக்கும் ;

"வனவிலங்கு" என்பது அடைத்துவைக்கப்பட்டதாகவிராத ஒரு யானை அல்லது தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்திற்கான அட்டவணைகளில் நிரற்படுத்தப்பட்ட வேறு எவையேனும் இனங்களைச் சேர்ந்த விலங்குகள் என்று பொருள்படும் ;

**71.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**அட்டவணை** (பிரிவு 45(2))

**விலங்கின நலம்பேணல் பணிப்பு**

விலங்கிற்குப் பொறுப்பாகவுள்ள ஆளின் பெயர் :-

அவரின்/அவளின் முகவரி :-

விலங்கு வைத்திருப்பவரின் முகவரி :-

விலங்கின் அடையாளங்காணல் ஏதேனுமிருப்பின் :-

விசேட அடையாளங்கள், எவையேனுமிருப்பின் :-

விலங்கின் பால், இனம் மற்றும் வகை :-

எந்நிலமைகளின்கீழ் விலங்கு வைத்திருக்கப்படுகின்றது :-

வழங்கப்பட்ட பணிப்பு :-

குறிப்புகள், எவையேனுமிருப்பின் :-

தேதியும் நேரமும் :-

பரிசோதகரின் கையொப்பம்

பெயரும் பதவிப் பெயரும்

## விலங்குக்குப் பொறுப்பாகவுள்ள ஆளினாலான வெளிப்படுத்துகை

சொல்லப்பட்ட விலங்கின், விலங்குகளின் நலன்கருதி, எனக்கு வழங்கப்பட்ட மேற்போந்த பணிப்பினால் பிணிக்கப்படுவதற்கு உடன்படுகின்றேன், சொல்லப்பட்ட பணிப்பிற்கு இணங்கியொழுகுவதற்கு இத்தால் பொறுப்பேற்கின்றேன் ; அவ்வாறு செய்யத் தவறின், விலங்கின் விலங்கின் நலம்பேணல் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியமைக்காக நான் குற்றம்சாட்டப்படலாமென்பதை அறிவேன்.

.....................................................................................

விலங்கிற்குப் பொறுப்பாகவுள்ள ஆளின் கையொப்பம்

(இணங்கியொழுகுவதற்கு மறுக்கப்படும் விடயத்தில், பரிசோதகர் அதனையும், அவரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும், குறிப்புகள் உரையின் கீழ் பதிதல் வேண்டும்,)

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*